# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : 2363 5010 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண். 23/2022 நாள் 03.02.2022

### கோவிட்-19 பரவல் இல்லாமல் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை நடத்த தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் நடவடிக்கை

தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் என அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் 12,838 வார்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அட்டவணையினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் 26.1.2022 அன்று வெளியிட்டது.

தேர்தல் காலங்களில் கோவிட்-19 பெருந்தொற்று பரவாமல் இருக்க தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இந்நிலையில் இந்திய தேர்தல் ஆணையத்தால் சமீபத்தில் (31.1.2022) வழங்கப்பட்டுள்ள நடத்தை விதிகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களுடன் கலந்தாலோசித்து நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலின் போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை கீழ்க்கண்டுள்ளவாறு வகுத்துள்ளது.

**கோவிட்-19 தொற்று காலத்தில் நடைபெறும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலின்போது கடைபிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் மீதான கூடுதல் அறிவுரைகள்**

**அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் ஏனையோர் பரப்புரை -**

தேர்தல் நடவடிக்கைகளில் பங்குபெறும் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், வாக்கு சேகரிப்பவர்கள், வாக்காளர்கள் மற்றும் அதிகாரிகள் சமூகநலம் / பாதுகாப்பு தொடர்பாக துறை சார்ந்த அதிகாரிகள் நிர்ணயத்துள்ள பொருத்தமான கோவிட் நடத்தைமுறைகள் மற்றும் பொதுவான அறிவுரைகள் மற்றும் விதிமுறைகளை (பிரதான) முதற் கடமையாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

1) சாலை நிகழ்ச்சிகள் நடத்துதல், பாதயாத்திரை, சைக்கிள் / மோட்டார் வண்டிகள் ஊர்வலம் ஆகியவை 11 பிப்ரவரி 2022 வரை தடை செய்யப்பட்டுள்ளது. பின்னர் சூழ்நிலையை கருத்தில் கொண்டு அதற்கேற்றவாறு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தொடர் அறிவுரைகளை வழங்கும்.

2) அரசியல் கட்சிகளின் ஊர்வலம், குறிப்பிட்ட வேட்பாளர்கள் அல்லது தேர்தல் தொடர்புடைய எந்த ஒரு குழுவும் ஊர்வலங்களாக செல்ல 11.2.2022 வரை அனுமதிக்கப்பட மாட்டாது. பின்னர் சூழ்நிலையை கருத்தில் கொண்டு அதற்கேற்றவாறு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தொடர் அறிவுரைகளை வழங்கும்.

3) இருப்பினும் கோவிட்-19 வழிகாட்டுதல்களை முறையாக பின்பற்றும் அடிப்படையில், அவ்வப்போது வாக்கு சேகரிக்கும் காலத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அப்போதைய நிலையை கருத்தில் கொண்டு பேரணி நடத்த மீள ஆய்வு செய்யும்.

4) நியமிக்கப்பட்ட திறந்தவெளி மைதானத்தில் அரசியல் கட்சி அல்லது போட்டியிடும் வேட்பாளர்கள் அதிகபட்சம் 1000 நபர்கள் அல்லது கூட்ட திடலின் கொள்ளளவிற்கு 50% மக்கள் அல்லது அவற்றில் குறைவான எண்ணிக்கையுடன் கூட்டம் நடத்துவதற்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அனுமதியளிக்க முடிவெடுத்துள்ளது.

5) மேற்காணும் நோக்கத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட இடத்தை முன்கூட்டியே கண்டறிவதும் மற்றும் அறிவிப்பதும் தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலரின் கடமையாகும்.

6) உள்அரங்கத்தில் நடைபெறும் கூட்டத்தில் அதிகபட்சம் 500 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் அல்லது உள் அரங்க கூட்டத்தின் கொள்ளளவை பொறுத்து 50% நபர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

7) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ளபடி, உள்ளரங்குக் கூட்டம் (Indoor meetings) நடத்தப்படும் போது மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தலின் போது கோவிட் தடுப்பு தொடர்பான பணிகளை கண்காணிக்க நியமிக்கப்பட்ட தொடர்பு அலுவலரிடமிருந்து உரிய சான்று வழங்குவதை மாவட்ட தேர்தல் அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

8) வீடுவீடாக சென்று வாக்கு சேகரிக்கும் நபர்களின் எண்ணிக்கை வரையறையை உயர்த்தி பாதுகாவலர்கள் நீங்கலாக 20 நபர்களை அனுமதிக்க தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் முடிவு எடுத்துள்ளது.

9) தேர்தல் நடவடிக்கைகளின்போது, அரசியல் கட்சிகளும், போட்டியிடும் வேட்பாளர்களும் மற்றும் வாக்காளர்களும், பொதுமக்களும் கோவிட்-19 பொருத்தமான நடத்தை முறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் மற்றும் மாதிரி நடத்தை விதிமுறைகளை இணக்கமாக கடைபிடிப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

10) 2022-நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்களை நடத்துவதற்கு ஏற்கனவே உள்ள 10.12.2021 மற்றும் 25.01.2022 நாளிட்ட வழிகாட்டுதல்களில் குறிப்பிட்டுள்ள ஏனைய கட்டுப்பாடுகள் தொடர்ந்து இயக்கத்தில் இருக்கும்.

கோவிட்-19 பரவலைத் தடுக்க தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள "உள்ளாட்சித் தேர்தல் காலத்தில் கடைபிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்"-யை பின்பற்றி நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை கோவிட்-19 தொற்று பரவல் இல்லாத தேர்தலாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் நடத்திட அனைத்து அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும், பத்திரிக்கையாளர்களும், பொதுமக்களும் அனைத்து வகையிலும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

3/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்